அரசாங்க அறிவித்தல்கள்

திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்வதற்கான தேவாலயம் பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் லபுகம கருணாநாயககே ரத்னசிறி எனும் பெயருடைய இலங்கைப் பதிவாளர் மா அதிபதியாகிய நான் பொதுக் கிறிஸ்தவ வழிபாட்டுத் தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமண வினைமுறை ஒழுங்கீடு செய்யும் நோக்கங்களுக்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கிறேன் :-

இல.	பதிவு செய்யப் படும் திகதி	விபரம்	இடம்	மதகுரு அல்லது சொந்தக்காரர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர்	கட்டிடம் எந்த மதத்திற் காகப் பதிவு செய்யப் படுகிறதோ அந்த மதம்
1375	2004.12.16	கன்னிமாதா கோவில்	நித்தம்புவ	வண. பிதா லெஸ்ரர் நோனிஸ்	ரோமன் கத்தோலிக்கம்

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் மா அதிபதி.

பதிவாளர் மா அதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
2004, திசெம்பர் 24.

1-337

அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"சோலா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2002.11.08 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "சோலா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்" என்னும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெட்டிஆராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "சோலா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்" என்னும் கம்பனியானது, அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெட்டிஆராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

என்(பிவிஎஸ்) 32057
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2004, திசெம்பர் 16.

1-312

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"அப்தாப் (பிறைவேற்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1986.05.29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "அப்தாப் (பிறைவேற்) லிமிட்டெட்" என்னும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெட்டிஆராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "அப்தாப் (பிறைவேற்) லிமிட்டெட்" என்னும் கம்பனியானது, அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெட்டிஆராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

என்(பிவிஎஸ்) 2653
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2004, திசெம்பர் 16.

1-313